




# கோலாலம்பூரில் கனத்த மழை:

## மரங்கள் சாய்ந்து போக்குவரத்துக்கு இடையூறாகின

**நமது நிருபர்**

கோலாலம்பூர், மே 27– தலைநகரில் சனிக்கிழமை மாலை நேரத்தில் கனமழை பெய்து மரம் சாய்ந்த காரணத்தினால் சுற்றுப் பகுதியிலுள்ள சாலைகளில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டதாக போக்குவரத்து போலீஸ் தெரிவித்தது.

ஜாலான் புக்கிட் பந்தாயில் பெரிய மரம் ஒன்று சாய்ந்ததில் ஆயர் சிலாங்கூர் கட்டடத்தை நோக்கிச் செல்லும் 3 பாதைகளில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது.

பந்தாய் ஹில் பார்க்கின் அருகிலுள்ள ஜாலான் பந்தாய் பெர்மாயில் மற்றொரு பெரிய மரம் சாய்ந்ததில் கெரிஞ்சியை நோக்கிச் செல்லும் 2 சாலைகளில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது.

இந்த பாதையை யாரும் பயன்படுத்தாமல் இருக்க அறிவுறுத்தப்பட்ட காரணத்தால் சேதமுற்ற வாகனங்கள் ஏதும் அடையாளம் காணப்படவில்லை என்று ஓர் அறிக்கையில் போக்குவரத்து போலீஸ் குறிப்பிட்டது.

இதனிடையே, பழைய கிள்ளான் சாலையின் பி.எச்.பி. பெட்ரோல் நிலையத்திற்கு அருகிலுள்ள 3 டன் எடை கொண்ட 4 லோரிகளின் மீது மரம் விழுந்ததில் யாரும் காயப்படவில்லை என்று கோலாலம்பூர் தீயணைப்பு மீட்புத் துறை தெரிவித்தது.

அதே போல் மற்றொரு சம்பவம் மலாயா பல்கலைக்கழகத்தின் ஃபர்ஸ்ட் ரெசிடென்ஷிய கல்லூரியில் மரம் ஒன்று மின்கம்பத்தில் சாய்ந்து முதன்மை சாலையில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது. இதனால் திரெல்லெசிஸ் அடுக்ககம், தாமான் துன் டாக்டர் இஸ்மாயிலின் ஜாலான் லோங் யீவ் கோ ஆகிய சாலைகளும் பாதிக்கப்பட்டன.



இந்த மரங்களை வெட்டிச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மாநகர் மன்றத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதாக அத்துறை குறிப்பிட்டது.